

கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும்

# 2 ஆயிரம் மாணவ-மாணவிகள் மெட்ரோ ரெயிலில் கல்வி பயணம்

சென்னை, மார்ச்.6-
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மெட்ரோ ரெயிலில் மாதந்தோறும் கல்விப் பயணம் அழைத்து செல்லப்படுகிறது.

இதில் மெட்ரோ ரெயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி விளக்கப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகள் மட்டும் இன்றி காஞ்சீபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அரசு பள்ளி மாணவ-மாணவிகளும் மெட்ரோ ரெயிலில் கல்வி பயணத்தில் அழைத்து செல்லப்படுகின்றனர்.

கடந்த 2018-2019-ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31 ஆயிரத்து 178 மாணவ-மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணித்துள்ளனர். கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 104 மாணவ-மாணவிகள் இந்த கல்வி பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.